


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.4.2025) கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் 25,024 பயனாளிகளுக்கு 239.41 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி, அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், க.ஈஸ்வரசாமி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் ரா.வெற்றி செல்வன், மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி சங்கேத் பல்வந்த் வாகே ஆகியோர் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.4.2025) கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்.எஸ் புரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் 586 பயனாளிகளுக்கு 18.16 கோடிரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி, அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், க.ஈஸ்வரசாமி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி சங்கேத் பல்வந்த் வாகே ஆகியோர் உடனிருந்தனர்.

## அனைத்துத் தரப்பு மக்களையும் கவனத்தில் கொள்வதால்தான்,

# இந்திய மாநிலங்களின் வளர்ச்சியில் தமிழ்நாட்டுக்கு முதலிடம்!

### கோவையில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் –

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**கோவை, ஏப். 29 -**

**கோவை மாவட்டத்தைச் சேர்ந்த 25 ஆயிரம் பயனாளிகளுக்கு சுமார் ரூ.240 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, நேற்று முன்தினம் கோவையில் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சுமார் 2,300 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 15 கோடி ரூபாய் அளவில் வங்கிக்கடன் இணைப்புகள், 533 பேருக்கு வீட்டுமனை பட்டாக்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள் உள்ளிட்ட பல நலத் திட்ட உதவிகளை வழங்கி, வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர் `எல்லாருக்கும் எல்லாம்' எனும் திராவிட மாடல் அரசின் திட்டங்கள், தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சென்று சேரும் வகையில், மக்கள் ஆதரவோடு அயராது உழைப்போம் என்று குறிப்பிட்டார்.**

அவர் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

இன்றைக்கு கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த 25 ஆயிரம் பயனாளிகளுக்கு, 240 கோடி ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்குவது, சுமார் 113 கோடி அளவில் பணி நிறைவுற்ற திட்டங்களை தொடங்கி வைப்பது, மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் ரூபாய் 9 கோடி மதிப்பில் செயற்கை புல்வெளி, ஹாக்கி மைதானம் மற்றும் 8 கோடி ரூபாய் மதிப்பில் மாணவர்கள் தங்கி பயிற்சி பெற விடுதி வசதி மற்றும் இரண்டு மினி ஸ்டேடியங்கள் அறிவிக்கப்பட்டு அதன் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவது என்று இங்கு நடைபெறுகின்ற நிகழ்ச்சியில் பங்கேற்று உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

**வங்கிக்கடன் இணைப்புகள்!**

குறிப்பாக, 2,250 சுய உதவிக்குழுச் சகோதரிகளுக்கு 15 கோடி ரூபாய் அளவில் வங்கிக்கடன் இணைப்புகளும் இங்கு வழங்கப்பட இருக்கின்றன. 220 குடும்பங்களுக்கு வீட்டுமனை பட்டாவையும் இந்த மேடையில் வழங்க இருக்கிறோம். கோவைக்கு எப்பொழுது வந்தாலும், ஒரு தனிப் புத்துணர்ச்சி கிடைக்கும். அந்தப் புத்துணர்ச்சியும், உத்வேகமும், உற்சாகமும் உங்களை பார்க்கும் பொழுது எனக்கு மீண்டும் வந்திருக்கிறது.

நம் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு என்றாலே, எல்லோருக்கும் எல்லாம் என்பதுதான் அர்த்தம். அதற்கு ஒரு சிறந்த உதாரணமாக இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**மிகப்பெரிய வெற்றி**

இங்கு மாணவர்கள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், விவசாயிகள், தொழில் முனைவோர்கள், விளையாட்டு வீரர்கள் வந்திருக்கிறீர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இந்த அரசுக்கு என்றைக்கும் பக்கபலமாக இருக்கின்ற தாய்மார்கள் ஆயிரக்கணக்கில் இங்கு வந்து இருக்கிறீர்கள்.

இப்படிச் சமூகத்தில் உள்ள அனைத்துத் தரப்பினருக்கும், அவர்களின் தேவையை அறிந்து ஒவ்வொரு திட்டத்தையும் நிறைவேற்றிச் செயல்படுத்துவதுதான் நம் முதலமைச்சர் அவர்கள். நம் திராவிட மாடல் அரசு. அதனால்தான் நம் அரசின் திட்டங்கள் உங்கள் மத்தியில் ஒரு மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது.



குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மகளிருக்கான திட்டங்கள் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்று இருக்கின்றன. நம் ஆட்சி அமைந்த பிறகு மகளிருக்கான விடியல் பயணம் திட்டத்திற்கான கையெழுத்துதான் நம் முதலமைச்சர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்து. இதன்கீழ் இன்றைக்கு சுமார் 700 கோடி பயணங்களை மகளிர் கட்டணம் இல்லாமல் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல், புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் உயர்கல்வி படிக்கின்ற சுமார் 3.5 லட்சம் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் மூலம் 3 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

**21 லட்சம் மாணவர்கள்**

மகளிர் காலையில் எழுந்து பிள்ளைகளுக்கு சமைத்துக் கொடுக்க சிரமப்படக்கூடாது என்று முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இதன் மூலம் ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 21 லட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலான ஒரு திட்டம் எதுவென்றால், இந்தியாவே திரும்பிப் பார்க்கக் கூடிய ஒரு திட்டம். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் கூட நம் முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்திருக்கிறார்கள். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் இதுவரை விண்ணப்பிக்காத மகளிர் வரும் ஜூலை முதல் புதிதாக விண்ணப்பிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே விரைவில், இன்னும் அதிகமான மகளிருக்கு உரிமைத் தொகை கிடைக்கப்போகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

**நம்பிக்கைத் தொகை**

மகளிர் சுய உதவிக் குழுக்கள் சகோதரிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, இந்த ஆண்டு 37 ஆயிரம் கோடி அளவிற்கு வங்கிக் கடன் இணைப்புகளை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, நம் கோவை மாவட்டத்தில் உள்ள குழுக்களுக்கு இந்த 4 ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 3,800 கோடி ரூபாய் அளவிற்கு, முதலமைச்சர் அவர்கள் வங்கிக் கடன் இணைப்பை வழங்கி இருக்கிறார். இதையெல்லாம் நம் முதலமைச்சர் அவர்களும், திராவிட மாடல் அரசும், உங்களுக்குக் கொடுத்துள்ள கடன் தொகையாக பார்க்கவில்லை. உங்களின் உழைப்பின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கைத் தொகையாகத்தான் நாங்கள் பார்க்கிறோம். அந்த நம்பிக்கையை காப்பாற்றுகின்ற வகையில், நம் சுயஉதவிக் குழுச் சகோதரிகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறீர்கள்.

குறிப்பாக, இந்த கோவை மாவட்ட சுயஉதவிக் குழுச் சகோதரிகளை பொருத்தவரை, ஏற்கெனவே பல்வேறு சாதனைகளைச் செய்துகாண்பித்து இருக்கிறீர்கள். அதில் சிலவற்றை மட்டும், இங்கு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். கோவை மாவட்டம், காரமடை ஒன்றியத்தில், செயல்பட்டு வருகின்ற ஒரு சுயஉதவிக் குழுவின் பெயர் பூந்தென்றல் மகளிர் சுயஉதவிக் குழு. இந்தக் குழுவில் உறுப்பினராக இருப்பவர் தங்கை பட்டுச்செல்வி. இவரின் கணவர் சில ஆண்டுகளுக்கு முன்பு மறைந்து விட்டார். தனது குடும்பத்தைக் காப்பாற்ற போட்டோ ஸ்டுடியோ ஒன்றில் தங்கை பட்டுச்செல்வி அவர்கள் பணியாற்றி வந்தார். அங்கு அவர்கள் கொடுக்கின்ற சம்பளம் வெறும் ஒன்பதாயிரம் ரூபாய். அந்த சம்பளம் அவர்கள் குடும்பத்தை நடத்துவதற்கு போதுமானதாக இல்லை. இதை அடுத்து தன் குழுவின் மூலம் வங்கிக் கடன் இணைப்பிற்கு அவர் விண்ணப்பித்தார்.

**சுயஉதவிக் குழுக்களின் வெற்றி**

`வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின் மூலம் கடனாகவும், மானியமாகவும் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயை அவர் பெற்றார். இதைக் கொண்டு அவரின் பகுதியில் சொந்தமாக ஃபோட்டோ ஸ்டுடியோ ஒன்றை தங்கை பட்டுச்செல்வி அவர்கள் தொடங்கி இருக்கிறார். இதன்மூலம் தங்கை பட்டுச்செல்வி அவர்கள் மாதம் 30 ஆயிரம் ரூபாய் அளவிற்கு வருவாய் ஈட்டி வருகிறார். ஃபோட்டோ ஸ்டுடியோ வேலைக்குச் சென்ற தங்கை பட்டுச்செல்வி, இன்றைக்கு சொந்தமாக ஃபோட்டோ ஸ்டுடியோவை நடத்தி, அவர் 4 பேருக்கு வேலை தருகிறார். இதுதான் நம் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வெற்றி. இதுதான் நம் திராவிட மாடல் அரசின் வெற்றி. அவருக்கு நம் அனைவரின் சார்பாகவும் நம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வோம்.

அவரைப்போலவே ராஜா மகளிர் சுய உதவி குழுவைச் சேர்ந்த சகோதரி சித்ரா. மயில் மகளிர் சுயஉதவிக் குழுவைச் சேர்ந்த சகோதரி சசிகலா போன்றோரும் குழுவின் உதவியின் மூலம் தொழில்முனைவோராக இன்றைக்கு உயர்ந்திருக்கிறார்கள். ஆண்டுக்கு 10 லட்சம் ரூபாய் வரை லாபம் ஈட்டுகிறார்கள். அவர்களுக்கும் நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வோம்.

**தமிழ்நாடு 43 சதவிகிதம்**

மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் இன்னும் பல்வேறு உயரங்களைத் தொட வேண்டும் என்றுதான் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறார்.

மகளிருக்காக நம் அரசு செயல்படுத்துகின்ற திட்டங்களால், இன்றைக்கு இந்திய நாட்டிலேயே வேலைக்குச் செல்கின்ற மகளிர்களில் 43 சதவிகிதம் பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற மிகப்பெரிய சாதனையை தமிழ்நாட்டு மகளிர் படைத்துள்ளீர்கள்.

**சட்டபூர்வமான உரிமை**

இந்த விழாவில் பட்டா வேண்டும் என்ற பல ஆண்டு கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், கிட்டத்தட்ட 220 பேருக்கு இந்த மேடையில் பட்டா வழங்கப்பட இருக்கிறது. பட்டா என்பது வெறும் ஆவணம் கிடையாது. உங்கள் இடத்தில் மீது உங்களுக்கு இருக்கின்ற சட்டபூர்வமான உரிமை. உங்களின் உரிமையை இன்றைக்கு நம் அரசு நிலைநாட்டி இருக்கிறது. பட்டாக்களைப் பெற வந்துள்ள அத்தனை பேருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாற்றுத்திறனாளிகள்**

இங்கு நிறைய மாற்றுத்திறனாளிகள் வந்து இருக்கிறீர்கள். உங்களுக்கான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு நாளும் பார்த்துப் பார்த்து செய்து கொண்டிருக்கிறார். உங்களுக்குத் தெரியும். ஒரு வாரத்திற்கு முன்பு நம் முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தார். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், உள்ளாட்சி அமைப்புகளில் நியமன முறையில் மாற்றுத்திறனாளிகளைத் தேர்வு செய்வதற்கான சட்ட மசோதாவை சென்ற வாரம் நம் முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

இதன்மூலம் 13 ஆயிரம் மாற்றுத்திறனாளி சகோதர சகோதரிகள் உள்ளாட்சி அமைப்புகளில் புதிதாக பொறுப்புக்கு வர இருக்கிறீர்கள். இப்படி அனைத்து தரப்பினரையும் கவனத்தில்கொண்டு நம் முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை செயல்படுத்துவதால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே 9.69 சதவிகிதம் வளர்ச்சியோடு தமிழ்நாடு அனைத்து மாநிலங்களையும் விட முதலிடத்தில் இருக்கிறது.


இந்த வளர்ச்சி இன்னும் உயர வேண்டும் என்றால் அதற்கு இந்த அரசிற்கு உங்களின் ஆதரவு தேவை. இந்த அரசு என்றைக்கும் மக்களுக்குப் பக்கபலமாக இருக்கும். மக்களாகிய நீங்களும் இந்த அரசிற்கு என்றைக்கும் துணை நிற்க வேண்டும், பக்கபலமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இந்த அரசின் திட்டங்களை, சாதனைகளை, பலன்களை, நலத்திட்டங்களை உங்களின் உறவினர்கள், நண்பர்களிடம் நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

உங்களுக்காக இந்த அரசு நம் முதலமைச்சர் அவர்களும் இன்னும் கூடுதலாக உழைக்க தயாராக இருக்கிறார்கள். எனவே இந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் பங்கேற்ற அத்தனை பேருக்கும், நலத்திட்ட உதவிகளை பெற்ற அத்தனைபேருக்கும் மீண்டும் எனது வாழ்த்துக்களை தெரிவித்து, இந்த சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த கரூர் மாவட்டச் செயலாளர் செந்தில் பாலாஜி அவர்களுக்கும், அமைச்சர் சகோதரி கயல்விழி செல்வராஜ் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், வந்திருக்கின்ற அனைத்து நலத்திட்டப் பயனாளிகளுக்கும் மீண்டும் எனது நன்றியை தெரிவித்து விடைபெறுகிறேன்.


இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி, அமைச்சர் கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், ஈஸ்வரசாமி, மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் பவன் குமார் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் ஐ.ஏ.எஸ்., துணை மேயர் வெற்றிச்செல்வன், கூடுதல் ஆட்சியர் சங்கேத் பல்வேந்த் ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் சர்மிளா, மாவட்டக் கழகச் செயலாளர்கள் கார்த்திக், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், தமிழ்நாடு ஹாக்கி அமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் செந்தில் ராஜ்குமார், கோவை மாவட்ட ஹாக்கி அமைப்பின் தலைவர் லட்சுமி நாராயணசாமி உள்பட பலரும் கலந்து கொண்டனர்.




ஒவ்வொரு தமிழர்க்கும் இனமான உணர்ச்சி ஊட்ட தந்தை பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கம் நூற்றாண்டு காண்கிறது! இந்த வரலாற்று தருணத்தை இரண்டு நாள் மாநாடாக திராவிட இயக்கத்தமிழர் பேரவை ஒருங்கிணைத்த நிலையில், அதன் நிறைவு நாள் நிகழ்ச்சி கோவையில் நடைபெற்றது. இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், வி.செந்தில் பாலாஜி, பீட்டர் அல்போன்ஸ், அருள்மொழி மற்றும் பலர் உள்ளனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.4.2025) கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 9.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான செயற்கை புல்வெளி தளத்துடன் கூடிய ஹாக்கி மைதானம் அமைக்கும் பணி உட்பட 8214 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 132 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி, அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், க.ஈஸ்வரசாமி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் ரா. வெற்றி செல்வன், மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி சங்கேத் பல்வந்த் வாகே ஆகியோர் உடனிருந்தனர்.